முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கும்பகோணம்.

2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் நாள் செவ்வாய்க்கிழமை

OS. No. 61/2024

பெயர் : விஸ்ணுவர்த்தனன் த/பெ. சரவணன்

PW 1

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிரதிவாதி எனது தாத்தா என்றால் ஆமாம். எனது தகப்பனாருடைய அப்பா ஆவார். பிரதிவாதிக்கு சுமார் 79 வயது இருக்கும். பிரதிவாதிக்கு வருமானம் உள்ளதா என்றால் உள்ளது. அதுபோன்று பிரதிவாதிக்கு வருமானம் இருப்பதாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தற்போது எந்த வருமானமும் இல்லாமல் பிரதிவாதி அரசு உதவியில் சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் இறந்துவிட்டார். முதியோர்களிடமிருந்து சொத்தை பெற்றுக்கொண்டு அதை அனுபவிக்கும் நபர்களை அவர்களை பராமரிக்க வேண்டுமென்று சட்டம் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் எனது தாத்தாவை பராமரித்து வருகிறேனா என்றால் தற்போது எனது பராமரிப்பில் இல்லை. எனது தந்தை இறக்கும்வரை எனது பராமரிப்பில் தான் பிரதிவாதி இருந்தார். தாவா சொத்தில் கீழ்தளம் எனது தாத்தா அனுபவிப்பதாகவும், முதல் தளம் எனக்கு அனுபவத்திற்காகவும், உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்து சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி வசம் தான் உள்ளது. நான் சிட்டி யூனியன் வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கிற்கு முன்பாக எனது தாத்தா பிரதிவாதியை பராமரிக்க ஏதேனும் பணம் உதவி செய்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பணம் கொடுத்து உதவி செய்துள்ளேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனது தாத்தாவை துன்புறுத்தி பணம் பறித்துள்ளேன் என்று பிரதிவாதி எனது தாத்தா சொல்கிறார் என்றால் அவ்வாறு இல்லை. கீழ்தளத்தை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்று சொல்லியுள்ளது எவ்வாறு அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனது தகப்பனார் இறந்த பிறகு பிரதிவாதி அவரது மகளான எனது அத்தை வீட்டிற்கு சென்றுவிட்டார். ஆனால்

கீழ்தளத்தை நாளது தேதிவரை அவரது அனுபவத்தில் தான் வைத்துள்ளார். எவ்வாறு அனுபவம் செய்துவருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி அவரது இஷ்டம் போல் அதை அனுபவிக்க அவருக்கு உரிமை உள்ளது என்றால் ஆமாம். வாடகைக்கு விட்டு அனுபவித்து வருகிறார் என்றால் உயிலில் எந்தவிதமாக அனுபவம் செய்யலாம் என்று குறிப்பிடவில்லை. எனது தகப்பனார் இறந்தபிறகு எனது பிரதிவாதியை பராமரிக்காமல் சொத்தை எழுதி தரசொல்லி மிரட்டி அவரை விரட்டிஅடித்து விட்டோம் என்றால் இல்லை. முதியோர்களை பராமரிக்க வேண்டிய கடமை எனக்கு உண்டா என்றால் உண்டு. நானும் பணம் உதவி செய்யமாட்டேன் என்றாலும், அவரும் வாடகைக்கு விடகூடாது என்று சொன்னேன் என்றாலும் சரியல்ல. வாடகைக்கு விடுவது தவறில்லை. எனது அனுமதி கேட்கவில்லை. அவ்வாறு அனுமதி கேட்கவேண்டுமென்று உயிலில் காணப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனக்கு நிறைய கடன் உள்ளது என்றால் எனக்கு வங்கி கடன் மட்டும் உள்ளது. மேற்படி கடன் தொகை தீர்ப்பதற்காக தாவா சொத்து வீட்டை பிரதிவாதியான எனது தாத்தாவிடமிருந்து பறித்து கொள்ள சென்றேன் என்றால் இல்லை. தாவா சொத்தை பிரதிவாதி விற்பனை செய்யக்கூடாது என்று உயிலில் வாசகம் உள்ளதா என்றால் ஆமாம். அவரது உடல்நிலை சம்பந்தமாக சிகிச்சைக்கு நான் பணம் கொடுத்து உதவி செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சென்னையில் இருக்கிறார் என்பது மட்டும் தான் தெரியும். பிரதிவாதியின் மனைவியான எனது பாட்டி தான் உயில் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். நான் பிரதிவாதியிடம் பணம் பறிப்பதற்காக அவரை துன்புறுத்திய காரணத்தினால் அவர் தாவா வீட்டிலிருந்து வெளியூருக்கு சென்றுவிட்டார் என்றால் இல்லை. மருத்துவமனையில் அவர் அனுமதியில் இருக்கும்போது அவரை சென்று பார்த்து பணம் கேட்டது சம்பந்தமாக ஆவணம் உள்ளது என்றால் அதுபோன்று நான் செல்லவில்லை. நியாயமான செலவிற்காக நான் கடன் வாங்கவில்லை என்றாலும், தவறான வேலைகளுக்காக கடன் பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதியை பராமரிக்காதபோது அவர் அனுபவத்தில் உள்ள கீழ்தளத்தை வாடகைக்கு விட்டு அவரே பராமரித்து கொள்ளலாம் என்றால் இல்லை. என்னிடம் அனுமதி வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால்

சரியல்ல. நான் தாவா வீட்டை விற்பனை செய்ய போவதாக சொல்லி அசல் ஆவணங்களை கேட்டு பிரதிவாதியை மிரட்டினேன் என்றால் இல்லை. இந்த வழக்கு எனது தாத்தாவை துன்புறுத்துவதற்காக வேண்டுமென்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதன் காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

Sd/– S. விஜய் ஆனந்த்,
Principal District Munsif,
Kumbakonam.